தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 131/பேரூ/2021

நாள்12. 01 .2022

திரு. ஜமீன் சாலமோன்,
நாசரேத், தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நாசரேத் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் பேரூராட்சி 59/13, பிரகாசபுரம், 5–வது தெரு, நாசரேத் என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜமீன் சாலமோன் என்பவரின் 15.12.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2021ல் பெறப்பட்டு, 131/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் பேரூராட்சி, 59/13, பிரகாசபுரம், 5–வது தெரு, நாசரேத் என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜமீன் சாலமோன் என்பவர் தமது 15.12.2021 நாளிட்ட புகார் மனுவில் ஆற்று குடிநீர் இணைப்பு வேண்டி ரூ.5,500/– (ரூபாய் ஐயாயிரத்து ஐநூறு மட்டும்) முன்வைப்புத் தொகையாக நாசரேத் பேரூராட்சியில் 9.7.2021 அன்று தான் செலுத்தியுள்ளதாகவும், ஆனால் இதுவரை குடிநீர் இணைப்புக்கான சென்டேஜ் கட்டணம் செலுத்துமாறு பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எந்தவொரு குறிப்பாணையும் பெறவில்லை என்றும், தமிழ்நாடு நகராட்சி ஆணை மற்றும் விதிகளின்படி வைப்புத் தொகை செலுத்திய 30 நாட்களுக்குள் குடிநீர் இணைப்பு வழங்கவேண்டுமென அரசாணை உள்ளபோதிலும், பேரூராட்சிக்கு பலமுறை நேரில் சென்று கேட்டும், செயல் அலுவலர் வழங்க மறுக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், செயல் அலுவலர், சுகாதார

பணிகளை கண்காணிப்பதில்லை. இதனால், தெருக்கள் குப்பை கூளங்ககாக காட்சியளிக்கின்றன. துர்நாற்றம் வீசி, சுகாதார கேடு விளைவிக்கிறது. செயல் அலுவலர் உள்ளூரில் தங்கி பணிபுரிய வேண்டுமென அரசாணை உள்ளபோதிலும், செயல் அலுவலர் திரு. பால்ராஜ் வெளியூரில் தங்கிக் கொண்டு, தினமும் காலை 11.00 மணிக்கு அலுவலகம் வந்து 4.30 மணிக்கு சென்றுவிடுகிறார். காலையில் தினமும் துப்புரவு பணியாளர்கள் வருகையை (மஸ்டர்) வருகைப் பதிவேட்டில் பதிவு செய்வதில்லை. நாசரேத் செயல் அலுவலர் திரு. பால்ராஜ், நாசரேத் பேரூராட்சிக்குட்பட்ட சாலைப் பணிகளையும், நீரோடைகளையும், மின்விளக்குகளையும், குடிநீர் வழங்குவதையும் சரியாக கண்காணிப்பதில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, தமது புகார் குறித்து விசாரணை மேற்கொண்டு நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 04.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 22.12.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. ஜமீன் சாலமோன் தனது 03.1.2022 நாளிட்ட கடிதத்தில் தான் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தபோது ஏற்பட்ட விபத்தில் பலத்த காயமடைந்துள்ளதால், மருத்துவரின் அறிவுறையின்படி தம்மால் பயணம் செய்ய இயலாததால், தம்மால் 4.1.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராக முடியவில்லை என்று தெரிவித்துள்ளார். தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 4.1.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"நாசரேத் பேரூராட்சியில் 389 பேர் குடிநீர் இணைப்பிற்காக விண்ணபித்துள்ளனர். அதில் கடந்த பிப்ரவரி 2021 முதல் 9.7.2021 வரை 134 பேர் பணம் செலுத்தியுள்ளனர். மனுதாரர் 133வது நபராக பணத்தை செலுத்தியுள்ளார். பணம் செலுத்தியவர்களுக்கு குடிநீர் இணைப்பு கொடுப்பது குறித்து திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் அனுமதி கோரப்பட்டது. நாசரேத் பேரூராட்சியில் குடிநீர் இணைப்புகளுக்காக பொதுமக்கள் அளிக்கும் அனைத்து விண்ணபங்களையும் பெற்றுக்கொண்டு தன்னிடமிருந்து அனுமதி பெற்ற பின்னரே, குடிநீர் இணைப்பு வழங்கவேண்டுமென திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்ததால், பணம் செலுத்தியுள்ள மேற்கண்ட 134 பேருக்கும் இன்னும் குடிநீர் இணைப்பு தற்போதுவரை அளிக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

3. நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 4.1.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள அறிக்கையில் தான் தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சியில் 11.8.2021 முதல் செயல் அலுவலராக பொறுப்பேற்றுள்ளதாகவும், நாசரேத் பேரூராட்சி பகுதி 11,300 சதுர கி.மீ பரப்பளவில்

18 வார்டுகளில், 102 தெருக்களைக் கொண்டதெனவும், பேரூராட்சியில் சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் கடந்த ஏழு ஆண்டுகளாக காலியாகவே உள்ளதால், பேரூராட்சி குடிநீர் திட்டப் பணியாளர்கள் மற்றும் மின் வினைஞர் பணியாளர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டு, தம்மால் கண்காணிக்கப்பட்டு வருகிறதென்று குறிப்பிட்டுள்ளார். இதுநாள் வரை பொது சுகாதாரப் பணிகள் தொய்வு ஏதும் ஏற்படாமல் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிவுரைகளின்படி நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் நீண்ட நாட்களாக உள்ள குறைகளான குடிநீர் பிரச்சனை, வாறுகால், மழைநீர் ஓடைகள் சுத்தம் செய்தல் ஆகிய பணிகள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, உள்ளூர் மக்களிடம் நற்பெயரை தான் பெற்றுள்ளதாகவும், பேரூராட்சியில் குடிநீர் புதிய இணைப்பு பெறுதல் சம்மந்தமாக உரிய வைப்புத் தொகை செலுத்தப்பட்டமைக்கான ஆவணங்கள் முறையாக கவனிக்கப்பட்டு உரிய நடவடிக்கையில் உள்ளது. தற்போது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பணி முன்னேற்ற ஏற்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாலும், குடிநீர் சார்ந்த பொருந்துநர் உடல்நலக் குறைவால் நீண்ட மருத்துவ விடுப்பில் உள்ளதாலும், கூடுதல் பணி ஒதுக்கி முறையே இணைப்பு வழங்குதல் குறித்த மதிப்பீடுகள் தயாரிப்பதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் எழுத்துப்பூர்வமாக எந்தவித மனுவினையும் தம்மிடம் அளிக்கவில்லை என்றும், பேரூராட்சி பகுதியிலிருந்து குடிநீர் இணைப்புவேண்டி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்ககபட்டு, மூப்புரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, விரைவில் மூப்புரிமை பட்டியலின்படி குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்:-

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட குடிநீர் இணைப்பிற்கான வைப்புத்தொகை ரூ.5,500/–க்கான காசோலை நகல், நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளித்துள்ள விளக்க அறிக்கை மற்றும் குடிநீர் இணைப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த பதிவேடு மற்றும் மூப்புரிமை பதிவேடு ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரரால் குடிநீர் இணைப்பு கோரி வைப்புத் தொகை ரூ.5,500/– (ரூபாய் ஐயாயிரத்து ஐநூறு மட்டும்) நாசரேத் பேரூராட்சிக்கு 9.7.2021ல் செலுத்தப்பட்டுள்ளது

- குடிநீர் இணைப்பு கோரி நாசரேத் பேரூராட்சியில் 389 பேர் விண்ணப்பித்துள்ளதும், அதில் கடந்த பிப்ரவரி 2021 முதல் 9.7.2021 வரை 134 பேர் பணம் செலுத்தியுள்ளதும், மனுதாரர் 133 வது நபராக பணத்தை செலுத்தியுள்ளதும், செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் அவர் நேரடி விசாரணையின்போது

கொண்டுவந்திருந்த குடிநீர் இணைப்புக்கான பதிவேடு மற்றும் மூப்புரிமை பதிவேட்டின்படியும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

❖ பேரூராட்சியின் அடிப்படை பணிகளில் பிரதானமாக இடம் பெறுவது குடிநீர் இணைப்பு வழங்குதலும், குப்பைகளற்ற சுகாதார மேம்பாடு, சாலை வசதி, மின் வசதி, கழிவுநீர்க் கால்வாய் போன்றவை இன்றியமையாத பணிகளாகும். அவ்வாறிருக்க, குடிநீர் இணைப்பு கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு தம்மிடமிருந்து அனுமதி பெற்ற பின்னரே குடிநீர் இணைப்பு வழங்கவேண்டுமென திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்ததன் காரணமாக தம்மால் குடிநீர் இணைப்பு தற்போதுவரை அளிக்கப்படவில்லை என்று நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலம் அளித்துள்ளது மிகப் பெரும் விந்தையாக உள்ளது.

❖ மனுதாரர் தமது புகார் மனுவில் தம்மால் குடிநீர் இணைப்பு பெறுவதற்கான முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்ட பின்னர், இதுவரை குடிநீர் இணைப்புக்கான சென்டேஜ் கட்டணம் செலுத்துமாறு பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எந்தவொரு தகவலும் தமக்கு வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். குடிநீர் இணைப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களைத் தொடர்ந்து, சென்டேஜ் கட்டணம் வசூலிப்பது, குடிநீர் இணைப்பு அளிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தல ஆய்வு மேற்கொண்டு, சென்டேஜ் கட்டணங்களை செலுத்திட விண்ணப்பதாரர்களுக்கு தகவல் அளித்திட நாசரேத் பேரூராட்சி யாதொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளாதது தெளிவாகிறது

❖ பேரூராட்சியில் உள்ள சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் ஏழு ஆண்டுகளாக காலியாக உள்ளதாலும், ஓட்டுநர் பணியிடம் மற்றும் மூன்று தூய்மைப் பணியாளர் பணியிடங்களும் காலியாக உள்ளதால், குடிநீர் திட்டப் பணியாளர் மற்றும் மின் வினைஞர் பணியாளர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டு, சுகாதார பணிகள் அனைத்தும் தொய்வில்லாமல் நடத்தப்பட்டு வருவதாக நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையதல்ல

❖ தற்போது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளதாலும், குடிநீர் திட்ட பொருத்துநர் உடல்நலக் குறைவால் நீண்ட மருத்துவ விடுப்பில் உள்ளதாலும், மதிப்பீடுகள் தயாரிப்பதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறியிருப்பது, மனுதாரர் தமது புகார் மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளதற்கு ஏற்படுத்தப்பட்ட/புனையப்பட்ட காரணங்களாகும்

❖ திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தமது உத்தரவில்லாமல், குடிநீர் இணைப்பு வழங்கக்கூடாது என்று வாய்மொழி உத்தரவினை செயல் அலுவலருக்கு வழங்கியுள்ளதாக அறியப்படுவதால், இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கலாமென்ற ஐயப்பாடு எழுகிறது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் சிறப்புநிலை பேரூராட்சி பொதுமக்களின் அடிப்படை வசதியான குடிநீர் வசதியை மேம்படுத்துவதிலும், அதனால் பேரூராட்சியின் வருவாய் இனங்களை பெருக்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு கோரி 389 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில், பிப்ரவரி 2021 முதல் 9.7.2021 வரை 134 பேர் பணம் செலுத்தியுள்ள போதிலும், இதுவரை குடிநீர் இணைப்பு வழங்காமலும், பணம் செலுத்தியவர்களுக்கு சென்டேஜ் கட்டணம் செலுத்திடக்கோரி கேட்புக் கடிதமும் வழங்காமல், காலதாமதம் செய்துள்ளது வேலியே பயிரை மேய்ந்ததற்கு ஒப்பாகும். பேரூராட்சியில் காலிப் பணியிடங்கள் ஏழு ஆண்டுகளாக இருந்து வருவதை நிவர்த்தி செய்திட இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாததும் ஏற்கத்தக்கதல்ல. பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டிய பேரூராட்சி நிர்வாகம் இதில் கவனம் செலுத்தவில்லை என்பது புலனாகிறது. எனவே, முறையாக குடிநீர் இணைப்புகளை வழங்காமல், தேவையற்ற காலதாமதத்தினை ஏற்படுத்தி வருவாய் இழப்பினை ஏற்படுத்திய பேரூராட்சியின் முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், நாசரேத் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ள அனைவரிடமிருந்தும் சென்டேஜ் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களைப் பெற்று, உரிய விதிமுறைகளுக்குட்பட்டு, குடிநீர் இணைப்பினை துரிதமாக வழங்கிட உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு உத்தரவிடப்படுகிறது. பேரூராட்சிகளில் அடிப்படை பணிகளில் ஏற்படக்கூடிய தொய்வினை ஆய்வு செய்து, அவற்றில் ஏற்படக்கூடிய காலதாமதங்களைக் களைய பேரூராட்சிகளின் ஆணையாளர் ஒட்டுமொத்த பேரூராட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான அறிவுறுத்தங்களை வழங்கிடுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. பேரூராட்சியின் வருவாயை கருத்திற்கொண்டு, சொத்துவரி விதித்தல் மற்றும் தொழில்வரி வசூலில் எந்தவித விடுபாடுமின்றி பேரூராட்சி செயல்பட அறிவுறுத்தப்படுகிறது. திட்ட ஒப்புதல் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு தற்போது செயல்பாட்டில் இருக்கும் விதிமுறைகளைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கப்படுகிறது.

The inaction and indifference of the Nazareth Town Panchayat Executive Officer and the total neglect of review of this basic bounden obligation of the local body by the Assistant Director of the region are censured in strong terms. Both of them are in a league to bring bad name to the Tamil Nadu Government now in the forefront of execution of welfare programmes and people-friendly administration by such lethargic and wooden passivity . Severe disciplinary action against both the Executive Officer and Assistant Director for their defiant and diabolic scheming of not initiating any action to issue water supply connections to more than 134 applicants for more than 11 months despite the fact that the Town Panchayat local body is set up and functioning to ensure

provision of basic and life-sustaining amenities like water supply. They have wantonly failed to fulfill their fundamental duty in a vital welfare aspect. The Commissioner of Town Panchayat is instructed to initiate necessary disciplinary action against the Executive Officer and Assistant Director responsible for such a messy management. The Commissioner of Town Panchayat, is requested to issue a detailed circular to all Executive Officers and Assistant Directors in the State on the importance and urgency of executing the schemes in a prompt manner without giving room for complaints and allegations of this kind.

2022ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. ஜமீன் சாலமோன்,
59/13, பிரகாசபுரம், 5ம் தெரு, நாசரேத், தூத்துக்குடி மாவட்டம்–628 617
செயல் அலுவலர்,
நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி, நாசரேத், தூத்துக்குடி மாவட்டம்–628 617
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (உறையில் பெயரிட்டு)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

12/01/22

செயலாளர்

12.1.22